[செல்வி ஜெ ஜெயலலிதா] [2012 மே 10

இந்தப் போட்டிகளைச் சிறப்புற நடத்திட, சென்னை நேரு விளையாட்டரங்கில் உள்ள செயற்கை இழை தடகள ஓடுபாதை மாற்றியமைக்கப்படுவதோடு, புதிய பயிற்சி செயற்கை இழை தடகள ஓடுபாதை ஒன்றும், அதாவது Warm-up Track அமைக்கப்படும். தற்போதுள்ள வசதிகள் அனைத்தும் உலகத் தரத்திற்கு உயர்த்தப்படும். சர்வதேசத் தரத்திலான உபகரணங்கள் வாங்கப்படும். மேலும், இப்போட்டிகளில் பங்குபெறும் அனைத்துப் பன்னாட்டு வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் உரிய வசதிகள் செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, இதற்காக 40 கோடி ரூபாய் செலவிடப்படும் என்பதையும் மனநிறைவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஈ) மேட்டூர் அனல் மின் நிலைய தீ விபத்து–நிவாரணம் மற்றும் மின் உற்பத்தி இழப்பைக் குறைக்க நடவடிக்கை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று, அதாவது, 10-5-2012 அதிகாலை 00.30 மணியளவில், மேட்டூர் அனல் மின் நிலையத்தின் நிலக்கரி கையாளும் பகுதியில் தீ விபத்து ஏற்பட்டது. இதனையடுத்து, 9 தீயணைப்பு வண்டிகள் உடனடியாகத் தீயணைப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டதன் காரணமாக, சுமார் 4 மணி நேரத்திற்குள் தீ முழுவதும் அணைக்கப்பட்டு விட்டது. இதன்மூலம் அனல் மின் நிலையத்திற்கு ஏற்படவிருந்த பெரும் பாதிப்பு தவிர்க்கப்பட்டது.

இந்தத் தீ விபத்தின் காரணமாக, இரண்டு சந்திப்புக் கோபுரங்களுக்கு இடையேயுள்ள நிலக்கரி கையாளும் பகுதி மற்றும் Conveyor System முற்றிலுமாகச் சேதமடைந்துள்ளதால், மேட்டூர் அனல் மின் நிலையத்தின் நான்கு யூனிட்டுகளுக்கும் நிலக்கரி எடுத்துச் செல்லமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது bunker-ல் உள்ள நிலக்கரிமூலம் இன்று மாலை வரை மட்டுமே மேட்டூர் அனல் மின் நிலையத்தை இயக்க இயலும்.

இந்தத் தீ விபத்தின் விளைவாக, மேட்டூர் அனல் மின் நிலையத்திலிருந்து உற்பத்தி செய்யப்படும் 840 மெகா வாட் மின்

உற்பத்திக்குத் தடை ஏற்பட்டுள்ளது. இந்தத் தீ விபத்தினால் ஏற்பட்ட பாதிப்புகளைச் சீர்செய்து, மீண்டும் மின் உற்பத்திப் பணிகளைத் துவக்க சுமார் ஒரு மாத காலம் ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், பொது மக்களுக்குப் பாதிப்பினை இயன்ற அளவு குறைக்கும் வகையில், தற்போது இயங்காமல் உள்ள தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் ஒரு யூனிட்டையும், வடசென்னை அனல் மின் நிலையத்தில் இயங்காமல் உள்ள ஒரு யூனிட்டையும் இன்று முதல் இயக்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் 420 மெகா வாட் மின் உற்பத்தி கிடைக்க வழிவகை ஏற்படும். மேலும், பிள்ளைபெருமாநல்லூரில் உள்ள தனியார் மின் உற்பத்தி நிலையத்திலிருந்து 330 மெகா வாட் மின்சாரம் பெறப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இவற்றின்மூலம், இழப்பு ஏற்பட்டுள்ள 840 மெகா வாட் மின்சாரத்தில், 750 மெகா வாட் மின்சாரம் கிடைத்துவிடும். (மேசையைத் தட்டும் ஒலி)

தீ விபத்தால் பாதிக்கப்பட்டுள்ள மேட்டூர் அனல் மின் நிலையத்தில் சீரமைக்கும் பணிகளை உடனடியாக மேற்கொண்டு, அந்தப் பணிகள் விரைந்து முடிக்கப்பட வேண்டுமென்று நான் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன்.

இந்தத் தீ விபத்தில் உயிரிழந்த உதவியாளர் திரு. நல்லதம்பி அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தீ விபத்தில் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள உதவியாளர் திரு. கோபால் அவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மாவட்ட நிருவாகத்திற்கு நான் உத்தரவிட்டுள்ளேன். மேலும், அவர் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டுமென்ற என்னுடைய விருப்பத்தினையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இந்தத் தீ விபத்தில் உயிரிழந்த நல்லதம்பி அவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து 2 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதையும், காயமடைந்த திரு. கோபால் அவர்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)